# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 21

சனிக்கிழமை 17 டிசெம்பர் 2022

மார்கழி 02 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053


## வயோதிபர்களைத் தாக்கி பணம், நகை கொள்ளை!

### மன்னாரில் சம்பவம்

மன்னார், டிசெ. 17
மன்னார், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில், தனிமையில் வசித்து வந்த வயோதிபத் தம்பதியரைத் »11

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், டிசெ. 17
பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலாலிப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று பலாலி பொலிஸ் நிலை »11

## மனைவி, மகள் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

### குடும்பத்தலைவர் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17
யாழ்ப்பாணம், வடமராட்சிகிழக்கு - வெற்றிலைக்கேணிப் பகுதியில், குடும்பத்தகராறு முற்றிய நிலையில், குடும்பத்தலைவரால் மனைவி மற்றும் மகள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. »11

### இராணுவத்தினரிடம் சரணடைந்து

# காணாமல் ஆக்கப்பட்டவரான எழிலனை முன்னிலைப்படுத்துக

### வவு. மேல்நீதிமன்றம் அதிரடி உத்தரவு

**வவுனியா, டிசெம்பர் 17**



**விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் இறுதிக்கட்டப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போன நிலையில், அவரை அடுத்த தவணையில் முன்னிலைப் படுத்தவேண்டுமென்று வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது என்று சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தெரிவித்தார்.** »11

## தமிழர்களை நன்றாக ஏமாற்றுகிறார் ரணில்

### சர்வகட்சி புறக்கணிப்பு தொடர்பில் ஜே.வி.பியினர் நேற்று வெளிப்படை

கொழும்பு, டிசெ. 17
நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட் »11

### அட்டைப் பண்ணைகளுக்கு எதிராக

## ஆளுநர் அலுவலகம் முன் நேற்று பெரும் போராட்டம்

### இரு வாரங்களில் தீர்வு என வாக்குறுதி

யாழ்ப்பாணம், டிசெ. 17
கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராஞ்சி - இலவன்குடா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளை அகற்றுமாறு வலியுறுத்தி வடமாகாண ஆளுநர் அலுவல – »11

## சிறுபான்மையினர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை!

### பிரதமர் தினேஷ் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 17
தமிழ், முஸ்லிம் மக்களின் தீர்க்கப்படாத புதிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் »11

### உள்ளூராட்சி விவகாரம்;

## தேர்தலை நடத்தக்கோரிய மனுக்கள் மீது விசாரணை

### ஜனவரியில் நடத்தப்படும்

கொழும்பு, டிசெ. 17
இலங்கையின் அரசமைப்பு மற்றும் சட்டங்களுக்கு அமைவாக உள்ளூராட்சிமன்றத் தேர்தலை தாமதமின்றி நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பிக்கு »10

### கடத்திச் செல்லப்பட்ட

## ஜனசக்தி குழுமத் தலைவர் கொடூரமாகப் படுகொலை!

### பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, டிசெ. 17
ஜனசக்தி குழுமத்தின் தலைவரும் பிரபல வர்த்தகருமான தினேஷ் சாப்டர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். பொரளை பொதுமயானப் பகுதியில், தனது காரில் கைகள் கட்டப்பட்டு கொடூரமான சித்திரவதைக்குட்பட்ட »10

## டிசெம்பர் 20 முதல் வடக்கில் கனமழை

யாழ்ப்பாணம், டிசெ. 17
வடக்கு - கிழக்கில் நாளை ஆரம்பிக்கவேண்டிய தொடர் மழைவீழ்ச்சி நான்கு நாள்கள் பின்னோக்கிச் செல்கிறது. டிசெம்பர் 20 செவ்வாய் முதல் 26 வரை வடக்கு - கிழக்கில் பரவலாக வயல்கள், குளங்கள் நிரம்பும் அளவுக்கு தொடர் மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது »11

### தமிழரசுக் கட்சியின்

## 75 ஆம் வருட தொடக்கவிழா!

கிளி., டிசெ. 17
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 75 ஆவது ஆண்டுத் தொடக்க விழா கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நாளை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி இடம் »10

## இராணுவச் சீருடையில் கிளிநொச்சியில் கொள்ளை!

### சந்தேகநபர் மக்களால் மடக்கிப்பிடிப்பு

கிளிநொச்சி, டிசெ. 17
இராணுவச் சீருடையை ஒத்த உடையணிந்து கொள்ளையடித்த நபர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு முறையான கவனிப்பின் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி-இரணைமாதாநகரில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
இரணைமாதாநகர் கிராமத்திலுள்ள »10

## புலமைப்பரிசில் பரீட்சை நாளை

கொழும்பு, டிசெ. 17
தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையை நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. 3 லட்சத்து 34 ஆயிரத்து 690 மாணவர்கள் இம்முறை பரீட்சைக்குத் தோற்றுகின் »10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச், ஏப்ரல் மாதங்களில் நாடு இருளில் மூழ்கலாம்!

## மின்பொறியியலாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 17

அடுத்த ஆண்டில் மின்வெட்டு நடைமுறை மேலும் அதிகரிக்கக்கூடும் என மின்சாரப் பொறியியலாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.



இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரட்ன தெரிவிக்கையில்;

கடந்த வருடத்தைக் காட்டிலும் இந்த வருடத்தில் மழைவீழ்ச்சி குறைவடைந்தமையால் நீர்மட்டம் குறைவடையும் ஏதுநிலைகள் உள்ளன. இது எதிர்காலத்தில் மின்சார உற்பத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

மின் உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கங்களின் தற்போதைய நீர்மட்டம் 75 சதவீதம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் நிலக்கரியை தாங்கிய 5 ஆவது கப்பலே தற்போது நாட்டை வந்தடைந்துள்ளது. அது நிறைவடைந்தால் அடுத்த ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நாடு இருளில் மூழ்கக்கூடும்.

தற்போதைய சூழலில் நிலக்கரியுடனான 24 கப்பல்கள் நாட்டை வந்தடைந்திருக்கவேண்டும். அதனை அரசாங்கம் தவறவிட்டுள்ளது. அதனால் எதிர்காலத்தில் கடும் மின்சார நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## பட்டப்படிப்புகளில் முன்னணி; இலங்கை வங்கி விருது

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தால் வழங்கப்படும் தொழில் நிர்வாகமாணி மற்றும் வணிகமாணி ஆகிய இரண்டு பட்டப் படிப்புகளிலும் முன்னணி பெறும் மாணவர்களுக்கு வருடாந்தப் பட்டமளிப்பு விழாவின் போது இலங்கை வங்கியால் 'இலங்கை வங்கி விருது' வழங்கப்படவுள்ளது.

இதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு, யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் தொழில் நிருவாகமாணி, வணிகமாணி ஆகிய பட்டங்களைப் பெறும் மாணவர்களில் முதனிலை பெறும் மாணவர்களுக்கு வருடாந்தம் தங்கப் பதக்கத்தையும், சான்றிதழையும் வழங்குவதற்கென இலங்கை வங்கியால் பத்து லட்சம் ரூபா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெயரில் இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து ஒவ்வொரு வருடமும் இலங்கை வங்கி விருதுக்கான தங்கப் பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

இதற்கான உடன்படிக்கையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவும், இலங்கை வங்கி சார்பில் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் வி.சிவானந்தனும் ஒப்பமிட்டனர். விருதுக்கான வைப்புச் சான்றிதழ் பல்கலைக்கழக நிதியாளர் கே.சுரேஸ்குமாரிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-14,125)

## திருட்டுகளில் ஈடுபட்ட சிறுவர்கள் சிறுவர் இல்லத்தில் ஒப்படைப்பு

கிளிநொச்சி, டிசெ. 17

பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட சிறுவர்கள் இருவர் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுவர்கள் இருவரும் தருமபுரம் பகுதியிலுள்ள கோயில் வளாகத்திலுள்ள திருப்பணி உண்டியலை திருட முற்பட்டபோது, கோயில் நிர்வாகத்தினரால் பிடிக்கப்பட்டு தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் 10, 12 வயதுடையவர்களாவர். அதன்பின்னர் சிறுவர்களிடம் மேற்கொண்ட பொலிஸ் விசாரணைகளில் சிறுவர்கள் இருவரும் பல்வேறு திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனத்தெரியவந்தது.

அதனையடுத்து சிறுவர்கள் இருவரும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முற்படுத்தப்பட்டபோது, இரு சிறுவர்களையும் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு தருமபுரம் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதற்கமைய இரண்டு சிறுவர்களும் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (ஒ-14,113)



## மாணவர்களுக்கு பால் வழங்கல்

சாவகச்சேரி, டிசெ. 17

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் நலனோம்பு சேவைகள் திட்டத்தின் கீழ் சங்க எல்லைப் பரப்பில் உள்ள 3 பாடசாலைகளின் மாணவர்களுக்கு போஷாக்கு உணவாக பால் வழங்கும் திட்டம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கைதடி எருதிடல் அ.த.க.பாடசாலை, சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க அ.த.க.பாடசாலை, மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் 110 மாணவர்களுக்கு பால் வழங்கப்பட்டது.

குறித்த பாடசாலை மாணவர்களுக்கு பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் பால் வழங்கப்படவுள்ளது.

சங்கத்தலைவர் சி.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் கலந்துகொண்டார். (ஒ-14,9)

## ஹெரோய்ன் வைத்திருந்த சந்தேகநபருக்கு மறியல்!

சாவகச்சேரி, டிசெ. 17

மீசாலை வடக்குப் பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று வெள்ளிக்கிழமை கட்டளையிட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்கு கிடைத்த தகவலையடுத்து யாழ்.மாவட்ட மதுவரி உதவி ஆணையாளரின் வழிநடத்தலில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மீசாலை வடக்கு தட்டான்குளம் வீதியில் குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

அதனையடுத்து சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தியபோது எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ச-9)

## நவம்பர் கொடுப்பனவை வழங்காமல் டிசெம்பர் கொடுப்பனவு வழங்க ஏற்பாடு

முதியோர் மற்றும் விசேட தேவையுடையோருக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படாத நிலையில் டிசெம்பர் மாதத்துக்குரிய கொடுப்பனவை வழங்க பிரதேசசெயலகங்களின் சமூக சேவைகள் அலகினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முதியோர் மற்றும் விசேட தேவையுடையோர் ஆகியோருக்கு நீண்டகாலமாக பிரதேச சமூக சேவைகள் அலகுகள் ஊடாக அந்தந்த அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்டு வந்தன.

இந்தக் கொடுப்பனவுகள் கடந்த செப்ரெம்பர் மாதம் தொடக்கம் பிரதேச சமுர்த்தி வங்கிகள் ஊடாக வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் கொடுப்பனவுகள் மீண்டும் பிரதேச சமூக சேவைகள் அலகினூடாக அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு டிசெம்பர் மாதக் கொடுப்பனவுகள் அனுப்பப்படல் வேண்டுமென சிறுவர், மகளிர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சால் அறிவிக்கப்பட்டது.

இதனால் பிரதேச சமூகசேவைகள் அலகினர் கொடுப்பனவுக்கான பட்டியலைத் தயாரித்து ஆயத்தமாக உள்ளனர். உரிய கட்டுநிதி கிடைத்ததும் கொடுப்பனவுப் பட்டியலை அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பவுள்ளனர். வருட இறுதிக் கணக்குகள் முடிவுறுத்த வேண்டியிருப்பதால் கட்டுநிதியை எதிர்பார்த்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,9)

## புனரமைப்பின்றிய வீதியில் வாகனம் மோதி ஒருவர் காயம்

சாவகச்சேரி, டிசெ.17

சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சைக்கிளில் சென்ற முதியவரை வாகனம் மோதியதில் முதியவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துக்கு வீதி புனரமைக்கப்படாததே காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சாவகச்சேரி தபால் நிலைய வீதிப் புனரமைப்புப்பணிகள் 'ஐரோட்' திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் நிதிப் பற்றாக்குறை காரணமாக கடந்த 5 வருடங்களாகியும் புனரமைப்புப் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. புனரமைப்பின்போது வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது. அத்துடன் வீதியின் பல இடங்களில் குழிகள் காணப்படுகின்றன. இதன் காரணமாக சைக்கிள் உட்பட வாகனங்களில் செல்வோர் எனப்பலரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையிலே சாவகச்சேரி சந்தைக்கு நேற்றுமுன்தினம் சைக்கிளில் வந்த முதியவரை அதே மார்க்கத்தில் வந்த வாகனம் மோதியது. இதில் காயமடைந்த முதியவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஒ-14,9,131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருப்பாவை விரத சிறப்பு வழிபாடுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 17

மார்கழி மாத திருப்பாவை ஆண்டாள் விரத உற்சவத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விஷ்ணு ஆலயங்களில் நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. அந்த வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்.வடமராட்சி வல்லிபுரத்து ஆழ்வார் தேவஸ்தானத்திலும் திருப்பாவை ஆண்டாள் விரத உற்சவம் சிறப்பாக இடம் பெற்றது.

அதிகாலை வேளை, தேவஸ்தான மடை திறக்கப்பட்டு கருவறையில் வீற்றிருக்கும் சங்கு, சக்கரத்தாழ்வார் மற்றும் திருப்பாவை ஆண்டாளுக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றன.

உற்சவக் கிரியைகளை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பி.கண்ணதாசன் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்களால் நடத்தப்பட்டது. நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமான திருப்பாவை ஆண்டாள் விரத உற்சவம் எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (ஒ-14,27)

# கொழுப்பின்மையாலேயே கால்நடைகள் உயிரிழப்பு!

## வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அதிகளவான கால்நடைகள் உயிரிழந்தமைக்கு அவற்றின் உடலில் போதிய கொழுப்பு இல்லாதமையே காரணம் என வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் வசீகரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அண்மையில் ஏற்பட்ட 'மண்டோஸ்' புயல் காரணமாக கடும் குளிரால் வடக்கு - கிழக்கில் நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்தன. இதனால் பண்ணையாளர்களுக்கு பல லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டது.

உடலில் கொழுப்பில்லாத காரணத்தாலேயே குளிர் அதிர்ச்சியை தாங்க முடியாமல் அவை உயிரிழந்துள்ளன எனத் தெரியவந்துள்ளது.

வடக்கு, கிழக்கில் திறந்தவெளியில் வளர்க்கப்படும் கால்நடைகள் மூலம் பாலுற்பத்தி குறைவாகவே உள்ளது. எனினும் நாட்டின் இறைச்சித் தேவையில் 65 வீதத்தை இந்த இரண்டு மாகாணங்களுமே பூர்த்தி செய்கின்றன.

திறந்தவெளியில் கால்நடைகளை வளர்ப்பது சாத்தியமில்லை. அந்த வகையில் பொருத்தமற்ற இடத்தில் வளர்க்கப்படும் கால்நடைகள் போதிய உணவில்லாமல், உடலில் கொழுப்பில்லாமல் காணப்பட்டமையால் குளிர் அதிர்ச்சியில் சிக்கி இறந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

ஈழத்துச் சிதம்பர

## திருவெம்பாவை உற்சவத்தை வழமைபோன்று நடத்துங்கள்

*காரைநகரில் நாளை போராட்டம்*

யாழ்ப்பாணம், டிசெ. 17

காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவெம்பா உற்வசம் வழமைபோன்று சிறப்பாக நடத்தப்படவேண்டும் எனக் கோரி நாளை ஞாயிற்றுக்கிழமை மக்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்;

ஈழத்துச் சிதம்பரம் என வர்ணிக்கப்படும் காரைநகர் சிவன்கோயிலில் திருவெம்பாவை உற்சவத்தை நடத்தாது பாலஸ்தாபனம் செய்வதற்கு ஆலய நிர்வாகத்தினர் ஏற்பாடு செய்தனர்.

அதனைக் கண்டித்து ஆலய உபயகாரர்களால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டதையடுத்து பாலஸ்தாபனம் செய்ய ஊர்காவற்றுறை நீதிமன்று இடைக்கால தடையுத்தரவை விதித்தது.

எனினும் திருவெம்பா உற்சவத்தை கொரோனாத் தொற்றுக் காலத்தில் நடத்தியமை போன்று காலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை நடத்த ஆலய நிர்வாகத்தினரால் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காரைநகர் வாழ் மக்களால் நாளை ஞாயிற்றுக்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது- என்றனர். (ச)



பருத்தித்துறை - வல்லை வீதியில்

## வீதி மின்விளக்குடன் கம்பமும் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 17

பருத்தித்துறை - வல்லை வீதியில் அமைக்கப்பட்டிருந்த சோலர் மூலம் இயங்கும் வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருந்த கம்பத்துடன் திருடப்பட்டுள்ளன. கரவெட்டி பிரதேசசபையால் தலா 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட 5 க்கும் மேற்பட்ட வீதி மின்விளக்குகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளன என்று வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் ஒரு குழுவாகவே இடம்பெற்றிருக்கமுடியும் என்று கூறும் சமூக ஆர்வலர்கள், அப்பகுதியில் இராணுவ முகாமும் அமைந்துள்ள நிலையில் இராணுவத்தினரும் இது குறித்து கண்காணிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஒ-14,27)

காணாமலாக்கப்பட்ட

## மகனை தேடியலைந்த தாய் வவு.வில் இறப்பு!

வவுனியா, டிசெ. 17



வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி அலைந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக நேற்றுமுந்தினம் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

வவுனியா - பூம்புகார் கல்மடு பகுதியைச் சேர்ந்த இ.வள்ளியம்மா (வயது - 78) என்ற தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு இவரது மகனான இராமசந்திரன் செந்தூரன் வவுனியாவில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்.

அவரைத் தேடி கடந்த 2 ஆயிரத்து 100 நாள்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சிமுறை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் பங்குபற்றி போராடி வந்தார். இந்தநிலையில் மகனைக் காணாமலேயே அவர் உயிரிழந்துள்ளார். (ச-110)

## தொடர் திருட்டில் ஈடுபட்டோர் கைது!

முல்லைத்தீவு, டிசெ. 17


விசுமடு மகா வித்தியாலயத்தில் தொடர் திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் நேற்றுமுந்தினம் வியாழக்கிழமை தெரிவித்தனர்.

விசுவமடு மகா வித்தியாலயத்தில் மின்மோட்டர் உட்பட பல பொருள்கள் தொடர்ச்சியாக திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் உயிர்கொல்லி போதைக்கு அடிமையானவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் திருடப்பட்ட பல பொருள்கள் அவர்களிடமிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டன. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14,27)

## பூநகரி பிரதேசசபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

கிளிநொச்சி, டிசெ. 17



பூநகரி பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் மூன்று மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச சபையின் அமர்வு சபையின் தவிசாளர் சிவகுமார் சிறீரஞ்சன் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது. இதன்போது 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சபையில் தவிசாளரால் முன்வைக்கப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

20 உறுப்பினர்களைக் கொண்ட பூநகரி பிரதேசசபையில், வரவு - செலவுத்திட்டத்துக்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் 11 உறுப்பினர்கள் ஆதரவாகவும் சுயேச்சைக்குழுவின் 3 உறுப்பினர்களுடன் ஐக்கிய தேசியக்கட்சியின் இரு உறுப்பினர்கள், சுதந்திரக்கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 8 பேர் எதிராகவும் வாக்களித்தனர். வாக்கெடுப்பில் ஓர் உறுப்பினர் சுகவீனம் காரணமாக சமூகமளிக்கவில்லை. இந்த நிலையிலேயே மேலதிக மூன்று வாக்குகளால் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. (ஒ-14,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார் கதை




பசிதுன்பம் தாகமேதும் நோக்காமல் நோற்றிருந்தோம்
ஐங்கரனே உன்னருளை எம் அடிமனதில்- எண்ணிநாம்
வேண்டுகிறோம் இன்னருளை இரக்கின்றோம் பலகாலும்
வேதவனத் துறைவோனே அருள் -முருகு



தமிழ்மொழித் தினத்தை முன்னிட்டு, தேசிய ரீதியில் நடத்தப்பட்ட நடிப்புப் போட்டியில் முதலிடம் பிடித்த செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை மாணவன் ஆன்சன் பாடசாலைச் சமூகத்தால் அண்மையில் கௌரவிக்கப்பட்டார். (ம-9)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். இடையூறுகள் நீங்கும்.

**இடபம்:** உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் லாபம் கிடைக்கும்.

**மிதுனம்**மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். சிறுசிறு பிணக்குகள் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் வெற்றியளிக்கும்

**கடகம்:**சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

**கன்னி:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். கடன் வாங்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும். வாழ்க்கைத்துணை மூலம் எதிர்பார்த்த காரியம் முடிவது மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம்** : எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக் கவும். பிரச்சினைகள் தோன்றும்.

**தனுசு:** உற்சாகமான நாள். உறவுகளால் செலவுகள் ஏற்படும். சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.

**மகரம்:** எதிலும் சற்று பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை தவிர்ப்பது நல்லது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கும்பம்:** எதிலும் ஒருமுறைக்குப் பல முறை சிந்தித்துச் செயற் படவேண்டிய நாள். திடீர் செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். செலவு செய்ய நேரிடும்.


**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

# மன்.இளம் இந்து குருமார்களுக்கு கணபதி ஹோமம் பயிற்சி நெறி

மன்னார், டிசெ. 17

மன்னார் மாவட்ட இளம் இந்து குருமார்களுக்கான "கணபதி ஹோமம்" பயிற்சி நெறி மன்னார் மாவட்ட இந்துக்குருமார் பேரவைத் தலைவரும் திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தின் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ தியாக கருணானந்தக்குருக்கள் தலைமையில் மன்னார் உப்புக்குளம் ஸ்ரீ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைவாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இந்துப்பண்பாட்டு நிதியம் என்பவற்றின் அனுசரணையுடன் பயிற்சிநெறி இடம்பெறவுள்ளது.

பயிற்சி நெறிக்கு வளவாளராக யாழ். பல்கலைக்கழகம் இந்துக்கற்கைகள் பீடாதிபதியும் முன்னேஸ்வரம் தேவஸ்தான தர்மகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர பத்மநாப சர்மா செயற்படவுள்ளார். பயிற்சிநெறியை மன்னார் மாவட்டச்செயலர் திருமதி அ. ஸ்ரான்லி டிமெல் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஒ-14,60)



# மாடுகள் களவாடல்; சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி, டிசெ. 17

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் 4 லட்சம் ரூபா பெறுமதியான கால்நடைகளை கடத்திச் செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியிலிருந்து மாடுகள் இரண்டை வேறு பகுதிக்கு கொண்டு செல்ல முற்பட்ட இருவரை கடந்த புதன்கிழமை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் சந்தேகநபர்களிடமிருந்து மாடுகளை மீட்டதுடன் அவர்களை மேலதிக விசாரணைகளின் பின் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-113)



# பொன்.சுகந்தனுக்கு தமிழ்நாட்டில் விருது

யாழ்.வடமராட்சியைச் சேர்ந்த பிரபல பேச்சாளர் பண்டிதர், சைவப்புலவரான பொன்.சுகந்தன் தமிழ் நாட்டில் 'புலமைச்சுடர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மதுரை பல்கலைக்கழகமும் அகத்தியர் தமிழ் சங்கமும் இணைந்து நடத்திய திருப்புகழ் நிகழ்வில்வைத்து இந்த விருது பேராசிரியர் கு.இராஜேஸ்குமாரால் பேராசிரியர் க.பரமேஸ்வரனிடம் பொன் சுகந்தன் சார்பில் வழங்கப்பட்டது.

பொன் சுகந்தனின் பல்துறை சார்ந்த புலமைக்கு இந்த விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-20)

# வீதிகள் புனரமைக்கப்பட்டால் பஸ் சேவைகள் நடத்தப்படும்

## இ.போ.ச கிளிநொச்சி சாலை முகாமையாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ. 17

கிளிநொச்சி - முக்கொம்பன் கிராமத்திலுள்ள வீதிகள் புனரமைக்கப்பட்டாலே அவ்வழியூடாக பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படும் என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

முக்கொம்பன் கிராமத்துக்கு அரசபுரம் ஊடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை தற்போது நடைபெறுவதில்லை. இதன் காரணமாக முக்கொம்பன் மகா வித்தியாலயத்துக்கு வருகை தரும் அரசபுரம், நேரடம்பன் பகுதிகளைச் சேர்ந்த 100 க்கும் மேற்பட்ட மாணவர்களின் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே முக்கொம்பனில் இருந்து கந்தபுரம் வழியாக கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் நடைபெற்ற இ.போ.ச சேவை வீதி சீரின்மையால் இரு ஆண்டுகளாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது முக்கொம்பன் கிராமத்துக்கு வருகின்ற பஸ் சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று இ.போ.ச கிளிநொச்சி சாலை முகாமையாளரிடம் முக்கொம்பன் கிராம மக்கள் முறையிட்டுள்ளனர். இதன் போது அரசபுரம் வீதி குன்றுங் குழியுமாக மாறியுள்ளது. அந்த வீதியால் பஸ் சேவை நடைபெற்றால் பஸ்கள் பழுதடைந்து விடும். தற்போது நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியில் பஸ்களை திருத்தம் செய்ய முடியாத நிலையில் நாம் உள்ளோம். எனவே வீதிகள் புனரமைக்கப்பட்டால் பஸ் சேவையை தொடர்ந்து நடத்த முடியும் என்று முகாமையாளர் தெரிவித்ததாக முக்கொம்பன் மக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையில் முக்கொம்பன் கிராமத்துக்கு போக்குவரத்தை மேற்கொள்ளும் அரசபுரம், கந்தபுரம் ஆகிய வீதிகளை விரைவில் புனரமைத்து முக்கொம்பன் கிராமத்துக்கு பஸ் சேவைகள் நடத்துவதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முக்கொம்பன் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14-13)

# மஞ்சளுடன் கைது: நபர்களுக்கு தண்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 17

மஞ்சளுடன் கைதானவர்களுக்கு நீதிமன்றத்தால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். 2 ஆயிரத்து 448 கிலோ மஞ்சளுடன் கடந்த 12 ஆம் திகதி மானிப்பாய் பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது, குறித்த இருவருக்கும் ஒரு லட்சம் ரூபா தண்டம் அறவிடப்பட்டதோடு மீட்கப்பட்ட 2 ஆயிரத்து 448 கிலோ மஞ்சளையும் அரச உடமையாக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14, 27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இதுவும் கடந்து போகும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டிய நல்லிணக்கத்துக்கான சர்வகட்சி மாநாட்டில் தமிழர் தரப்பின் பிரதான கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்த கருத்துக்கள், ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் சேர்க்கப்படவில்லை. இது சுட்டிக்காட்டப்பட்ட பின்னரும் எந்தவொரு விளக்கமும் ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்படவில்லை. எனவே அது திட்டமிட்ட ரீதியில் தெரிந்து கொண்டுதான் தவிர்க்கப்பட்டிருக்கின்றது என்பது உறுதியாகின்றது. அந்தக் கூட்டத்தில் இரா.சம்பந்தன், காணாமல் போனோர் தொடர்பில் முன்வைத்த கருத்து முக்கியமானது. அத்துடன் அரசியல் தீர்வு தொடர்பில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டித் தீர்வு என்ற தமிழர் தரப்பின் நிலைப்பாடும் முக்கியமானது. அவற்றை ஜனாதிபதி செயலகம் திட்டமிட்டு வெட்டி ஒதுக்கியுள்ளது. இதன் ஊடாக சிங்கள மக்களுக்கு, தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை மறைக்க முயல்கின்றதா? என்ற சந்தேகம் எழுகின்றது.

நல்லாட்சி அரசின் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது நாட்டின் அரசமைப்புத் தொடர்பில் பெரும் சர்ச்சை மேலெழுந்தது. அதாவது 'ஏக்கிய ராஜ்ஜிய – ஒருமித்த நாடு' என்பதே நாட்டின் தன்மையாக – ஆட்சி முறைமையாக இருக்கும் என்று குறிப்பிடப்பட்டது. இலங்கையின் ஆட்சிமுறை ஏக்கிய ராஜ்ஜிய அதாவது தமிழில் கூறுவதானால் ஒற்றையாட்சி என்று இருந்து வருகின்றது. புதிய அரசமைப்பில் அதனை 'ஏக்கிய ராஜ்ஜிய – ஒருமித்த நாடு' என்று குறிப்பிடப்போவ தாகத் தெரிவித்தமை பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. அதாவது சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் ஆட்சி முறைமை 'ஏக்கிய ராஜ்ஜிய' என்பது தொடர்ந்து இருக்கின்றது என்பதை உறுதி செய்வதற்கும் நம்ப வைப்பதற்கும் அந்தச் சொல்லாடல் இடம்பெற்றிருந்தது. 'ஏக்கிய ராஜ்ஜிய' என்றால் ஒற்றையாட்சி என்பதால் தமிழ் மக்கள் அதனை ஏற்கமாட்டார்கள் என்பதால், ஒருமித்த நாடு என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது இரண்டு இன மக்களையும் ஏமாற்றுவதற்கான திட்டம் என்றேதமிழர்மற்றும்சிங்களத்தரப்புக்கள்கூறியிருந்தன.

இந்த ஆசிரியர் தலையங்கத்தில் முன்னரே கூறியபடி, இரு இன மக்களுடன் தொடர்புடைய விடயம் ஒன்றை, ஒரு தரப்பு ஒருவாறாகவும் மற்றைய தரப்பு இன்னொருவாறாகவும், அதாவது அந்தத் தரப்புக்கள் இரசிக்கும் வகையில் விடயங்களைச் சொல்லி எதையும் சாதிக்க முடியாது. இரண்டு தரப்புக்குமே வெளிப்படையாக எல்லாம் தெரியப்படுத்தப்படவேண்டும். ஆனால், இப்போது இரா.சம்பந்தனின் கருத்து ஜனாதிபதி செயலகத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையில் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டிருப்பதன் ஊடாக நல்லாட்சி காலத்து திருவிளையாடலை ரணில் மீண்டும் ஆரம்பித்திருக்கின்றார் என்றே எண்ணத்தோன்றுகின்றது. இது நல்லாட்சி காலத்தில் புதிய அரசமைப்பு எப்படி நிறைவேற்றப் படாமல் போனதோ அதேபோன்று இப்போதைய முயற்சியையும் தேக்கவைக்கும்.

இந்தப் பாலபாடங்கள் ஒன்றும் ரணிலுக்குத் தெரியாததல்ல. அதைத் தெரிந்தே செய்வதன் பின்னணியில் இருக்கும் விடயம் தீர்வு முயற்சிகளை நீர்த்துப்போகச் செய்வதற்கான எத்தனமே. ரணிலைப்பொறுத்தவரையில் நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலேயே தீர்வுக்கான முயற்சிகளை ஆரம்பித்திருக்கின்றார். அது வெற்றி பெறவேண்டும் என்ற அரசியல் விருப்பு அவரிடம் அறவே கிடையாது. அதைவிட அவரை இப்போது கைப்பாவையாக வைத்திருக்கும் ராஜபக்ச கும்பலுக்கும் தீர்வு தொடர்பில் துளியும் விருப்பம் கிடையாது. தமிழர் தரப்பு இதை உணர்ந்து கொண்டு செயலாற்றவேண்டும். நல்லாட்சி காலத்தில் செய்த தவறுகளை இனியும் இழைக்காமல் இருக்கவேண்டும். அதைவிடுத்து, மக்கள் என்னதான் சொன்னாலும்,அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், ரணில் அழைக்கும் போதெல்லாம் 'நல்லெண்ணத்தைக்' காட்டுவதாகச் சொல்லிக்கொண்டு, தமிழ் அரசியல்வாதிகள் ஓடிச் செல்வார்களானால் பத்தோடு பதினொன்றாக இம்முறையும் தீர்வு முறை நம்மைக் கடந்தே போகும்.


நாளொரு நல்வார்த்தை

"அறிவு உங்களுக்கு அதிகாரத்தை வழங்கலாம். குணம்தான் மரியாதையைப் பெற்றுத்தரும்."
- புரூஸ் லீ



# 2023 இல் நாட்டுக்கு 8 பில்.டொலர் தேவை

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 17
இலங்கை அரசாங்கம் அடுத்தாண்டில் 8 பில்லியன் டொலரை எதிர்பார்க்கின்றது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர்ஸ் ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச சொத்துக்களை மறுசீரமைப்பதன் மூலம் அரசாங்கம் 3 பில்லியன் டொலர் வரை திரட்டும்.
தவிர சர்வதேச நாணய நிதியத்துக்கு அப்பால் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து அடுத்த ஆண்டு 5 பில்லியன் டொலர் கடனை இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கிறது.
அத்துடன் சில அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதில் ஜனாதிபதி ஆர்வமாக உள்ளார். அதன்மூலம் 23 பில்லியன் டொலரை திரட்ட முடிந்தால் திறைசேரி பலப்படுத்தப்படும் - என்றார். (ச-இ)

# உள்நாட்டு உற்பத்தி 11.8 வீதமாக சுருக்கம்

## புள்ளிவிவரத் திணைக்களம் தகவல்

கொழும்பு, டிசெ. 17
இந்த வருடத்தின் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 11.8 வீதமாக சுருங்கியுள்ளது என தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.4 வீதமாக சுருங்கியது. மூன்றாம் காலாண்டில் விவசாயம் 8.7 வீதமாகவும் தொழில்துறை 21.2 வீதமாகவும் சுருங்கியது. அதேசமயம் சேவைகள் 2.6 வீதமாக குறைந்துள்ளன.
2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 16.4 வீதமாக சுருங்கியது.
அதன்பிறகு, ஒரு காலாண்டில் இலங்கை அனுபவித்த இரண்டாவது மோசமான பொருளாதார சுருக்கம் இதுவாகும் என்று பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினர்.
அதிக பணவீக்கம், மின்வெட்டு, அதிக வட்டி விகிதங்கள், இறக்குமதி பற்றாக்குறை, எரிபொருள் மற்றும் உரத் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு காரணிகள் கடந்த காலாண்டில் வளர்ச்சியைப் பாதித்தது.
மக்களின் உண்மையான வருமானம் குறைவதால் அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற பொருள்கள் மற்றும் சேவைகளின் தேவை குறைவது பொருளாதாரத்தை இந்தச் சரிவை நோக்கி செலுத்தியுள்ளது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.
(ச-இ)

நாளை
18.12.2022
ஞாயிற்றுக்கிழமை
மார்கழி 03

சுபநேரம் : 09.23 - 10.53
ராகுகாலம் : 04.53 -06.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்குச் சேவை வழங்க காரணங்கள் முன்வைக்காதீர்

## அரச அலுவலர்களுக்கு ஜனாதிபதி வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 17

அரசாங்கம் என்ற வகையில் அனைவரும் ஒன்றிணைந்து பொதுமக்களுக்கு சேவை செய்யவேண்டும். பொதுமக்கள் சேவையை நிறைவேற்றத் தவறியமைக்காக அரச அலுவலர்கள் ஒருபோதும் காரணங்களை முன்வைக்கக்கூடாது.

இவ்வாறு பதுளை மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

அங்கு ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

அரச நிறுவனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை உருவாக்காத வகையில் பொதுமக்களுக்கு அதிகபட்ச சேவையைப் பெற்றுக் கொடுப்பது அரச அலுவலர்களின் பொறுப்பாகும்.

மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே சட்டங்கள் மற்றும் சட்டக்கோவைகளை கேடயமாகப் பயன்படுத்த வேண்டுமே தவிர நிறுவனங்களில் பணியாற்றுவதற்காக அல்ல.

பதுளையிலுள்ள பைனஸ் மரங்களை அகற்றுவதற்கு முன்னர் அது தொடர்பிலான விஞ்ஞானபூர்வமான அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

நீரேந்துப் பிரதேசங்களைப் பாதிக்கிறதா என்பது தொடர்பில் விஞ்ஞானபூர்வமாக ஆராய்தல் வேண்டும். பைனஸ் பயிர்ச்செய்கையை நீக்கிவிட்டு டர்பன்டைன் பயிர்ச்செய்கையில் எதற்காக ஈடுபட்டீர்கள்? தவறான கருத்துக்களில் மாட்டிக் கொள்ளாதீர்கள்.

அரச அதிகாரிகள் திறமையாகச் செயற்பட வேண்டும் என்பதே எனது நோக்கம். எனக்கு காரணங்கள் தேவையில்லை.

அரசாங்கம் என்ற வகையில் அனைவரும் ஒன்றிணைந்து பொதுமக்களுக்கு சேவை செய்ய வேண்டும் - என்றார். (ச-இ)



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் சீரற்ற காலநிலை மற்றும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாவாந்துறை மற்றும் பழம் வீதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு கடந்த புதன்கிழமை உலருணவுப் பொதிகள் கையளிக்கப்பட்டன.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச)

## சுற்றுலாவிகள் வருகை நடப்பாண்டில் உயர்வு!

கொழும்பு, டிசெ. 17

நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்த ஆண்டு உயர்வடைந்துள்ளது என சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 6 லட்சத்து 44 ஆயிரத்து 186 சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருகை தந்தள்ளனர்.

இம்மாதத்தின் முதல் 7 நாள்களில் மாத்திரம் 16ஆயிரத்து 168 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அதிக சுற்றுலாவிகளின் வருகை கடந்த மார்ச் மாதத்தில் பதிவாகியுள்ளது. அவர்களில் ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 510 பேர் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர்.

மேலும் இந்த வருடத்தில் பிரித்தானிய நாட்டைச் சேர்ந்த 78ஆயிரத்து 827 பேரும், ரஷ்ய நாட்டைச் சேர்ந்த 74ஆயிரத்து 713 பேரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அமைச்சு மேலும் குறிப்பிட்டது. (ச-இ)



## குறும்படத்தில் வெற்றிபெற்றோருக்கு சான்றிதழும் பரிசில்கள் வழங்கலும்

யாழ்ப்பாணம், டிசெ. 17

மதுசார மற்றும் போதைப்பொருள் தகவல் மையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையுடன் இணைந்து முன்னெடுத்த மதுசார மற்றும் உயிர்கொல்லி போதைப்பொருள் விழிப்புணர்வுக் குறும்படப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழும் பரிசில்கள் வழங்கலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்தக் குறும்படப் போட்டிக்காக 30 குறும்படங்கள் மாணவர்களால் தயாரிக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றில் எட்டுக் குறும்படங்கள் சிறந்த குறும்படங்களாகத் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

போட்டியில் செல்வகுமார் ரினோஷன் முதலாம் இடத்தைப் பெற்று ரூபா 50 ஆயிரம் பணப்பரிசையும் டி.திஷான் தலைமையிலான குழுவில் டி. தவதேவன், என். நிரோஷாந், ஆர்.தர்ஷினி ஆகியோர் இரண்டாம் இடத்தைப் பெற்று ரூபா 30 ஆயிரம் பணப்பரிசையும், ஆர்.பெனயா மூன்றாம் இடத்தைப் பெற்று ரூபா 20 ஆயிரம் பணப்பரிசையும் பெற்றுக்கொண்டனர். நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர். எஸ்.ரகுராம், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தின் நிர்வாக இயக்குநர் புபுது சுமணசேகர ஆகியோர் கலந்து கொண்டனர். (ஓ-14)

## குடும்பத்தில் ஐவருக்கு ஒரேநாளில் திருமணம்


கொழும்பு, டிசெ. 17

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய்- தந்தை, மகள், மருகன் மற்றும் தாத்தா- பாட்டி, ஆகியோருக்கு ஒரே நாளில் திருமணம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் கண்டி யட்டிநுவர பிரதேசத்தில் பதிவாகியுள்ளது. யட்டிநுவர பிரதேச செயலகத்தால் அண்மையில் சட்டப்படி திருமணம் செய்துகொள்ளாத 19 ஜோடிகளுக்கு பதிவுத் திருமணம் செய்து வைக்கப்பட்டது. இதன்போதே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவருக்கு ஒரே நாளில் திருமணம் நிகழ்ந்துள்ளது. (ச-இ)

# வவுனியா திருநாவற்குளம் வீதியை புனரமைக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

வவுனியா, டிசெ. 17



பெயர்ப்பலகை இடப்பட்ட வவுனியா திருநாவற்குளம் வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி பொது மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முன்னெடுத்தனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையூடாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் திருநாவற்குளத்தின் சுமார் 970 மீற்றர் வீதி புனரமைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. குறித்த வீதி திருநாவற்குளம் முதலாவது ஒழுங்கை என்று பெயரிடப்பட்டு புனரமைப்பதற்கான ஆரம்பகட்டப் பணிகள் இடம்பெற்றிருந்தன.

தற்போது 5 வருடங்கள் கடந்தும் வீதி புனரமைக்கப்படவில்லை. திருநாவற்குளம் மற்றும் பட்டைக்காடு கிராமங்களை இணைக்கும் வீதியை சுமார் ஆயிரத்து 500 குடும்பங்கள் பயன்படுத்துகின்றனர். வீதி புனரமைக்கப்படாதுள்ளதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே வீதியை விரைவில் புனரமைத்துத் தாருங்கள் என்று தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது "மக்களின் மனமறிந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை உடனடியாகத் திட்டத்தை தொடர்க", "ஐவீதி எமது கனவு", "எமது வீதி எமக்கு வேண்டும்", "மோசம் மோசம்! எமது பயங்கர படுமோசம்" உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளைத் தாங்கியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஓ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

வைத்தியசாலை

**சுத்திகரிப்பாளர் (ஆண்)**

சம்பளம் நேரில் பேசித்
தீர்மானிக்கப்படும்.

**076 047 7106, 021 225 6990**

(cr 38776) (2.6)

## மீள் எழுச்சிக்கான உதவும் கரங்கள் நடத்தும் பெண்களுக்கான தொழிற்பயிற்சி

**பயிற்சிகள் :**

1) தையல் கலை
2) கணினிப்பயிற்சி
3) அழகியல் கலை

**தகுதிகள் :**

1) தரம் 8ஆம் வகுப்பு கற்றிருத்தல்
2) விண்ணப்பதாரர் வயாவிளான். பலாலி தெற்கை சேர்ந்தவராக இருத்தல்

**வசதிகள் :**

1) பயிற்சி முற்றிலும் இலவசம்.
2) தூர இடங்களில் உள்ளவர்களுக்கு விடுதி + உணவு வசதிகள் வழங்கப்படும் .
3) பயிற்சிக்காலம் 06 மாதங்கள் .
4) பயிற்சி முடிவில் NVQ III தர அரச சான்றிதழ் வழங்கப்படும்.

தகுதியுடைய விண்ணப்பதாரர் தமது சுயவிபரக் கோவையை தயாரித்து 31.12.2022 ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும். (தொலைபேசி இலக்கத்தை எழுதுவும்)

**மீள் எழுச்சிக்கான உதவும் கரங்கள்**
**159/6 K.R ஒழுங்கை,**
**பலாலி வீதி, கோண்டாவில்.** (CS 48135)(3/6)

## மீள் கேள்வி அறிவித்தல் - 2023
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை , மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட. கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள். (துவிச் சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம் மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது). இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் 2023.12.31 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழுங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 26.12.2022 மதியம் 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 27.12.2022 பி.ப 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 27.12.2022 பி.ப 2.30 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை. தலைமை அலுவலகம். மானிப்பாய்.

| இல | பொதுச் சந்தைகள்,(துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம்,பொதுமலசலகூடம் உள்ளடங்கலாக). இறைச்சிக்கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | | |
| 01 | காக்கைதீவுப் பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம் மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 1000.00 | 8000.00 | 799755.00 | |
| 02 | காக்கைதீவுப் பழையமீன் சந்தைக் கட்டிடம் . (கடலுணவுகள் களஞ்சியப்படுத்துவதற்கு மாத்திரம்) | 500.00 | 2,000.00 | 19030.00 | |
| 03 | நவாலி பிரசாத் சந்தை | 1,000.00 | 2,500.00 | 250,920.00 | |
| 04 | சாவற்கட்டுச் சந்தை | 1,000.00 | 2,500.00 | 277200.00 | |
| 05 | ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 212,870.00 | |
| பண்டத்தரிப்புபட்டின உப அலுவலகம் | | | | | |
| 01 | பண்டத்தரிப்பு சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 500.00 | 12,540.00 | |
| பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலகம் | | | | | |
| 01 | மாகியப்பிட்டிப் பொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 235,125.00 | |
| 02 | இளவாலைப் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 68,675.00 | 1000 |
| 03 | இளவாலைப் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 509,115.00 | 1000 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2022.11.05 ஆம் திகதிய உதயன். தினக்குரல் பத்திரிகைகளிலும். தலைமைஅலுவலகம். உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**அ.ஜெபநேசன்,**
**தவிசாளர்.,**
**வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை,**
**மானிப்பாய்.**
**2022.12.17**

(cr 38579) (2.6)

# மணி விழா வாழ்த்து

## திரு. தம்பிராஜா சாம்சன் லூர்த்திஸ்

(ஆலோசகர், செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம், யாழ்ப்பாணம்)





நல் ஆசிரியராக விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக. உப அதிபராக. அதிபராக. திட்ட முகாமைத்துவ நிபுணராக. பிரதித்திட்டப்பணிப்பாளராக பல உயரிய பதவிகளை வகித்து இன்று எமது நிறுவனத்தின் ஆலோசகராக எமக்கு பல வழிகளிலும் உறுதுணையாக இருந்து சேவையாற்றிக் கொண்டிருக்கும் மணிவிழா நாயகனை வாழ்த்துவதில் நாம் பேருவகை யடைகிறோம். தங்களது சேவை தொடர்ந்து எமக்கு கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
**செவிப்புலன் வலுவற்றோர்**
**புனர்வாழ்வு நிறுவனம் யாழ். மாவட்டம்**
இல, 16/2, சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம்.

(CS48152)(3/6)

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய, ஆத்மசாந்தி நிகழ்வு பிற்போடல்



நாளை (18.12.2022) ஞாயிற்றுக் கிழமை மதியம் 12.00 மணியளவில் **ராஜா கிறீம்கவுஸ், சரஸ்வதி மண்டபத்தில்** நடைபெற இருந்த

**அமரர்**
**சுப்பிரமணியம் தேவராஜா**

அவர்களின் வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசன நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளது.

**திரு.திருமதி.மைதிலி ஸ்ரீஸ்கந்தராஜா**
**திரு.தேவராஜா வாகீசன்**
**சிவன் வீதி, திருநெல்வேலி,**
**077 315 1404, 077 118 7947.**

# Angel International School

Jaffna Manipay Chavakachcheri

## ADMISSIONS OPEN

Admissions are available for the classes from 3+ to A/L from 4th of January 2023.

| School Location | Available Classes | Contact Number |
|---|---|---|
| Manipay | 3+ to A/L | 021 225 5628 |
| Jaffna | Primary | 021 222 4118 |
| Chavakachcheri | Primary | 0777065365 |

Please call us for further information.

**- School Administration**

## ஏஞ்சல் சர்தேசப் பாடசாலை

யாழ்ப்பாணம் மானிப்பாய் சாவகச்சேரி

3+ தொடக்கம் உயர்தரம் வரையான வகுப்புக்களிற்குரிய அனுமதிகளை 2023 ஜனவரி 4ம் திகதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| பாடசாலை | வகுப்புக்கள் | தொடர்பு இலக்கம் |
|---|---|---|
| மானிப்பாய் | 3+ to A/L | 021 225 5628 |
| யாழ்ப்பாணம் | 3+ to Grade 5 | 021 222 4118 |
| சாவகச்சேரி | 3+ to Grade 5 | 0777065365 |

மேலதிக விபரங்களிற்கு எம்மைத் தொடர்புகொள்ளவும்.

**- பாடசாலை நிர்வாகம்**

# VACANCY

Applications are invited from suitable candidates for the following positions:

1) **Physics Teacher**
2) **English Language Teacher**
3) **Western Music Teacher**

Candidates should have at least a Bachelor's Degree/Diploma in the relevant subject.

**Applications along with your CV can be emailed to angelism2006@gmail.com**

**Please call us for further information:**
**Tel: 021 225 5628, Mob: 0776159627**

**- School Administration**

(CR 38767)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் 8 மாணவர்களுக்கு ஜனாதிபதி பதக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 17

சுற்றாடல் செயற்பாடுகள் தொடர்பில் நடத்தப்பட்ட ஜனாதிபதி பதக்க பரீட்சிப்பில் யாழ்ப்பாணத்தில் 8 மாணவர்கள் சித்தியடைந்துள் ளனர்.

சுற்றாடல் நேய மிக்க மாணவ சமு தாயத்தை உரு வாக்கி சுற்றாடல் முகாமைத்துவத் தில் முன்னோடிக ளாக மாற்றுகின்ற முயற்சியாகக் கல்வி அமைச்சும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் ஒருங்கிணைந்து சுற்றாடல் முன் னோடி நிகழ்ச்சித் திட்டத்தை நாடு பூராகவும் உள்ள பாடசாலையில் நடைமுறைப்ப டுத்தி வருகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுற் றாடல் தொர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டு சித்தி பெற்ற பாடசாலை மாணவர்களுக்கு 'ஜனாதிபதி பதக் கம்' ஜனாதிபதி யால் நேரடியாக வழங்கப்படுகின்ற உயரிய பதக்கமா கும்.

அதற்கமைவாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ்.மாவட்ட அலு வலகத்தில் அண் மையில் நடத்தப் பட்ட ஜனாதிபதி பதக்க பரீட்சிப்பில் மானிப்பாய் மக ளிர் கல்லூரி மாண விகளான திவானி திருவரங்கன், டினி சியா வசந்தகுமா ரன் ஆகியோரும் யாழ். அத்தியார் இந்துக் கல்லூரி மாணவர்களான மீனலோஜினி இரா ஜமோகன், செல் வராசா கேருஜன், திருத்தகி ஜெயரட் ணம் ஆகியோரும் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி குகப்பிரியா ரவீந்தி ரன், யாழ்.பெரியபு லம் மகாவித்தியா லய மாணவி கிருத் திகா மகேந்திரன், யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி பானுஜா மந்திர மூர்த்தி ஆகிய 8 மாணவர்களுமே ஜனாதிபதி பதக்கத் தைப்பெறவுள்ள னர். (ஓ-14-125)


**வீட்டுப் பணிப்பெண்தேவை**

வயோதிபப் பெண்ணொருவரை பராமரிப் பதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

(CS 22211) (3/6) **T.P :077 069 8105**


## கண்ணீர் அஞ்சலி



தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய விரிவுரையாளர் **திருமதி மீனலோஜினி சுப்பிரமணியம்** அவர்களின் தாயார்


**திருமதி பராசக்தி அங்கையா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாண பிராந்திய கல்வி டிப்ளோமா நெறியின் இணைப்பாளர், விரிவுரையாளர்கள்**

(C22265)1-6

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04.06.1942 மறைவு 28.12.2021

**அமரர் சின்னத்துரை இராசையா**

**திதி : நவமி (17.12.2022)**

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் அப்பா
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும் அப்பா
மண்விட்டு மறைந்து நீங்கள்
விண்நோக்கி சென்றாலும் அப்பா
கண்விட்டு மறையாமல் கனகாலம்
எங்களுடன் இருப்பீர்கள் அப்பா
எல்லாம் வல்ல உங்கள் ஆத்மா
சாந்தியடைய கொழும்புத்துறை
அம்மனை வேண்டுகிறோம்.

(CR 38773) (3/6) **குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 07 . 1948

மறைவு 16 . 12 . 2022

# கந்தையா செல்வரட்ணம்

கந்தர்மடம் 42, மணல்தரை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வரட்ணம் நேற்று (16.12.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், இராசகுமாரியின் ஆருயிர் கணவரும், பிரசாந், ரேகா (உயிரியல் விஞ்ஞான பீடம் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாளினியின் பாசமிகு மாமனாரும், அக்ஷிகாவின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**தகவல்:**
**செ. பிரசாந் - மகன்**
**077 721 7276**

(CS48154) (2-6)

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 77 ஆவது ஆண்டு அகவை தினமும்

பிறப்பு 17 . 12 . 1945



இறப்பு 17 . 12 . 2003

# பொன்னுத்துரை ஐயாத்துரை

**(துரைசிங்கம்)**




மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச் சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்வுக்காய்
பாடுபட்டு பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
எம்முயிர்த் தெய்வமே!
விண்ணுலகம் சென்று இன்று 19 ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் எம்நெஞ்சைவிட்டகலவில்லை.
என்றென்றும் உங்கள் பாசம் போற்றியே பணிந்திடுவோம்.

**315, ஆனந்தன் வடலி வீதி,**
**அரியாலை,**
**யாழ்ப்பாணம்.** (CS 48153)(3/6)

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், மருமகன்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 03 . 1938



இறப்பு 16 . 12 . 2022

# ஞானப்பிரகாசம் இராசையா

**(முன்னாள் கோல் காப்பாளர், உரும்பிராய் சென்.மைக்கல் உதைப்பந்தாட்ட கழகம்)**

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் இராசையா நேற்று (16.12.2022) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராஜேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ஆபேல்-சொர்ணம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான விசுவாசம், பரிமளம், இராசமணி, திருமேனி, திருச்செல்வம், பவளம் ஆகியோரின் சகோதரரும், சொபிதா (பிரான்ஸ்), ரெங்கனி (லண்டன்), றியா, பிரபா, கருணா, நெல்சன் (சுவிஸ்), சியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகேஸ்வரன், சந்திரன், இந்திரன், டிசான், பரிமிலா, யூலியா, சுரேந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், றேகா, செல்ரன், டக்ஷன், சோமியா, பிளின்ரோ, பிரமிதா, ஜெறோமியா, சதேயூ, கென்றி, இமித், எபிரோன், றொஜின், றெஜின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (17.12.2022) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் தேவாலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் உரும்பிராய் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**பிரபா (மகன்)-0762 648 348**
**0771 906 727**

(CS 22259) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**1). வரவேற்பாளர்கள் (Receptionist)**
**2). சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் (Marketing Executive)**

ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் (19.12.2022) திங்கட் கிழமை முற்பகல் 10.00- பிற்பகல் 02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதி, தாவடி வடக்கில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 255 0807




சர்வதேச மாற்றுத்திறனாளி தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள மாற்றுத்திறனாளிகளை கௌரவிக்கும் நிகழ்வு தருமபுரம் பகுதியிலுள்ள மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ய-113)

# மரண அறிவித்தல்

**தோற்றம் 04.02.1970** **திரு.சிவசோதி ரவீந்திரன் (ரவி)** **மறைவு 14.12.2022**



காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் இல.198 கஸ்தூரியார் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சிவசோதி ரவீந்திரன் கடந்த (14.12. 2022) அன்று காலமானார்.

அன்னார் சிவசோதி காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், சியாமளா வின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், அனுஷாவின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராசேந்திரன் மற்றும் பாலேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12. 2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியள வில் கஸ்தூரியார் வீதியிலுள்ள இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல் : குடும்பத்தினர். 021 222 3555**

(CS 22260) 1-6

# மரண அறிவித்தல்

"இயேசு அவனை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்"
யோவான் - 11:25

**தோற்றம்** 16 . 04 . 1958



**மறைவு** 16 . 12 . 2022

## திரு.ஜெகதீசன் நெல்சன் ஜோசப் (ஜெயம்)

**(ஜெயம் கூல்பார் - உரிமையாளர்)**

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவிலடியை வசிப்பிட மாகவும் கொண்ட திரு. ஜெகதீசன் நெல்சன் ஜோசப் அவர்கள் நேற்று (16.12.2022) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெகதீசன் சூசையம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நாகராணியின் பாசமிகு கணவரும், அன்ரனி (மணியம்), மரியதாஸ் (செட்டி), மரியறீற்றா (ராணி), இருதயமேரி (கலா), மரியறோசனி (செல்வி), விக்டர் இமானுவேல் (சிறி), ஜோன் பீற்றர் (அவுஸ்திரேலியா), ஜெயபாஸ்கரன் (ராகவன்), காலஞ்சென்ற சந்திராதேவி (சாந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிராஜ் (CEB), சுபராஜ் (ஜெயம் கூல்பார்), வரதராஜ் (ஜெயம் கூல்பார்), நிமல்ராஜ் (Railway), மைக்கல் ராஜ் (தீயணைப்பு சேவை), சசிந்தாமேரி (கிட்ஸ் கிலவட்ஸ்), தேவராஜ் (ஜெயம் கூல்பார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிரிஸ்டிலா (D.O), டில்ருக்ஷி (D.O), மதுரா, ஜீபிகா (M.So), அபிராமி (EKWA Marketing), மயூரதாஸ் (World Vision) ஆகியோரின் அன்பு மாமனாரும், சியான், செசான், ரோகித், ரேஷ்மா, ஜெரோன், ஜெசி, கபிரியேல், விகான், ஆரிஸ், அர்ஷா, ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் சிவஞானசுந்தரம், சிதம்பரப் பிள்ளை, அமரர் நாகராசா, அமரர் நாககன்னி, நாகேந்திரன், நாகலிங்கம், நாகேஸ்வரன், நாகசோதி, நவேந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18.12.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் இறுதி ஆராதனை நடைபெற்று, பிற்பகல் 4.00 மணியளவில் தாவடியில் அமைந்துள்ள கல்வாரி பூரண சுவிஷேஷ தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 977 1959**
**077 196 5066**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 22652) 1/6)

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 28 . 03 . 1948



**மறைவு** 30 . 11 . 2022

லண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய மூத்தோர் சங்க வழிநடத்துனரும், அளவெட்டி மயிலாந்தர் வளவு ஞானவைரவர் ஆலய தர்மகர்த்தாவும், மற்றும் இலண்டன் தமிழர் நலன்புரிச் சங்கம் (TWAN) இயக்குநர்களில் ஒருவருமாகிய

## திருமதி கருணேஸ்வரி சேனாதிராஜா (கருணா)

யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியாவை வதிவிட மாகவும் கொண்ட கருணேஸ்வரி சேனாதிராஜா அவர்கள் 30.11.2022 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னார், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை செல்லம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்ற சேனாதிராஜா அவர்களின் அன்பு மனைவியும், சர்வேஸ்வரன், சசிகலா, சசிதரன், சசிரேக்கா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்வராசா, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், விக்கி, ரகு, கஜந்தினி, உதயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரெவிந்தனா, பிறியா, லக்ஷன், ரேவிக்கா, சதுர்ஷன், கனுஷன், சர்னிக்கா ஆகியோரின் அன்புப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி 18.12.2022 ஞாயிற்றுக்கிழமை பிரித்தானியாவில் காலை 7.00 மணிமுதல் 10 மணிவரை Mayfair Venue 1078 - 1082 High Road, Romford, RM6 4BD எனும் முகவரியில் நடைபெற்று தொடர்ந்து மதியம் 12.00 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை City of London Cemetery and Crematorium Aldersbrook Road, London, E12 5DQ எனும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

அளவெட்டியில் மயிலாந்தர் வளவு ஞானவைரவர் ஆலயத்திற்கு அருகில் அமையப்பெற்றுள்ள "கருணை இல்லத்தில்" 18.12.2022 ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணி முதல் மாலை 5.00 மணிவரை நேரலை காட்சியுடன் கூடிய இரங்கல் அஞ்சலி நிகழ்வு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 22266) 1/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் நூலகத்தில் டிஜிற்றல் அறிவு மையம்

'ஆசிய மன்றம்' நிறுவனம் நல்லாட்சிக்கான புத்தாக்க நிறுவனத்துடன் இணைந்து வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் அனுசரணையுடன் சுன்னாகம் பொதுநூலகத்தின் ஒருபகுதியில் டிஜிற்றல் அறிவு மையத்தைப் புதிதாக நிறுவி யுள்ளது.

மேற்படி மையத்தின் திறப்பு விழா நேற்றுக் மு.ப. 10.15 மணிக்கு வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் கருணாகரன் தர்சன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆசிய மன்றத்தின் துணைத் தேசிய நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் ஏ.சுபாகரன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பிரதம நூலகர் எஸ்.கேதீஸ்வரன், வலிகாமம் வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் வி.துஸ்யந்தன், ஆசிய மன்ற நல்லாட்சிக்கான புத்தாக்க நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.சபேசன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

டிஜிற்றல் அறிவு மையத்தைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆசிய மன்றத்தின் துணைத் தேசிய நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் ஏ.சுபாகரன் சம்பிரதாயபூர்வமாகத்



திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து டிஜிற்றல் அறிவு மையத்தின் சேவைகள் தொடர்பாக நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு விளக்க மளிக்கப்பட்டது.

சுமார் மூன்று மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பில் சுன்னாகம் பொதுநூலகத்தின் ஒரு பகுதியில் குறித்த டிஜிற்றல் அறிவு மையம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் முதன்முதலாக வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் சுன்னாகம் பொதுநூலகத்தில் டிஜிற்றல் அறிவு மையம் அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கிளிநொச்சியில் கரைச்சிப் பிரதேசசபை தெரிவு செய்யப்பட்டு அங்கு தற்போது டிஜிற்றல் அறிவு மையத்துக்கு எனப் புதிதாக கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்ற மையும் குறிப்பிடத்தக்கது. (ம-66)

## தேர்தலை...

மாறுகோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை விசாரணைக்கு எடுப்பதற்கு உயர்நீதிமன்றம் திகதி நிர்ணயித்துள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தலை உரிய காலப்பகு திக்குள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட மாறுகோரி உயர்நீதிமன்றத்தில் டிசெம்பர் 18 ஆம் திகதி இரு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ் சித் மத்தும பண்டார, சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் இணைந்து முதலாவது மனுவையும், நாடாளு மன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், தயா சிறி ஜயசேகர, லக்ஷ்மன் கிரியெல்ல, அநுர பிரிய தர்சன யாப்பா ஆகியோர் இணைந்து இரண்டா வது மனுவையும் தாக்கல் செய்தனர். இந்த நிலையில், குறித்த இரண்டு மனுக்களையும் ஜனவரி மாதம் 18ம் திகதி விசாரணைக்கு எடுத் துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அறிவித்தலை தேர்தல் ஆணைக் குழு டிசெம்பர் இறுதி வாரத்துக்குள் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக் கது. (அ-ம-44)

## ஜனசக்தி...

நிலையில் நேற்றுமுன்தினம் பின்னிரவு மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார்.

நபரொருவருக்கு பல கோடி ரூபா கடன் தொகை யொன்றை வழங்கியமை தொடர்பில் சம்பந்தப் பட்ட கடனாளியைச் சந்திப்பதற்காகச் சென்ற போதே அவர் இவ்வாறு படுகொலை செய்யப்பட் டுள்ளார் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசார ணையில் தெரியவந்துள்ளது. சாப்பரிடம் கடன் பெற்ற நபர் இந்தக் கொலையின் பின்னணியில் இருக்கின்றாரா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். பொலி ஸாருக்கு மேலதிகமாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (அ-ம)

## இராணுவச்...

வீடொன்றில் நேற்று அதிகாலையில் வீட்டுக்குள் உள்நுழைந்த கொள்ளையன் ஒருவன் பெறும தியான நகைகளை அபகரித்துக் கொண்டு வெளி யேறியபோது, வீட்டின் உரிமையாளரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளான். இதையடுத்து திருடன் கத்தி யால் வீட்டு உரிமையாளரின் முகத்தில் வெட்டி விட்டு தப்பிக்க முயன்றுள்ளான். வீட்டின் உரிமை யாளர் கூக்குரலிட்டதை அடுத்து அயலவர்கள் ஒன்றுகூடி குறித்த கொள்ளையனை மடக்கிப் பிடித்துள்ளனர்.

பிடிப்பட்ட கொள்ளையன் இராணுவச் சீருடைக்கு ஒத்த உடை அணிந்திருந்ததோடு, முகமூடியும் அணிந்திருந்துள்ளான். அத்தோடு அவரிடம் கூரிய கத்தி ஒன்றும் காணப்பட்டுள்ளது. கொள் ளையனிடமிருந்து சங்கிலி மற்றும் காப்பு, கத்தி என்பவற்றை மீட்டெடுத்த ஊர்மக்கள் 'முறை யான கவனிப்பின்' பின்னர் அவரை முழங்காவில் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (அ-ம-214)

## 75ஆம் வருட...

பெறவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனா திராஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ் வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சிவசுப்பிர மணியம் பத்மநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (அ-ம)

## புலமைப்பரிசில்...

றனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகை யிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

'இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் பகுதி இரண்டு வினாத்தாள் முதலாவதாகவும், பகுதி ஒன்று வினாத்தாள் இரண்டாவதாகவும் வழங்கப் படவுள்ளது. மாணவர்களின் நலன்கருதியே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல பாடசாலை யொன்றில் மூன்று பரீட்சை நிலையங்கள் இருந் தால் அந்த மூன்று நிலையங்களிலுமுள்ள கடிகாரங்கள் ஒரேநேரமாக இருக்கவேண்டும். பொறுப்பாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர் களின் கடிகாரமும் அந்த நேரத்துக்கு ஒத்ததாக சரியான நேரமாக இருக்கவேண்டும்' என்றார். (அ-ம-44)

## ப. நோ. கூ. சங்கத்தால் மாணவருக்கு பசும்பால்

யாழ்ப்பாணம், டிசெ. 17

பாடசாலை மாணவர்களின் போசாக்கை மேம்படுத்தும் முகமாக சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுக் சங்கத்தால் பசும்பால் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக இந்தச் செயற்றிட்டம் கடந்த திங்கட்கிழமை கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் இதனை ஆரம் பித்து வைத்தார். (ச-17)




## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியான வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

- சாரதி (Driver)
- வெல்டர் (Welder)
- சுத்திகரிப்பாளர் (Cleaner)

மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் எதிர்வரும் (19.12.2022) திங்கட்கிழமை, மு.ப. 9.00 - 12.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

உதயன்

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 24.08.1949

மறைவு 17.11.2022

அமரர்

வயிரமுத்து புவனேஸ்வரி(கிளி)

ஈரைந்து மாதங்கள் கருவினிலே
எமைச்சுமந்து உதிரத்தைப் பாலாக்கி
அமுதூட்டி எமை வளர்த்து உருவாக்கிப்
பார்த்த அன்னைக் கவியே
சீர் போற்றும் இவ்வுலகில் சான்றோராய்
நாம் மிளிர மெழுகாய் உருகியே
அரும்பாடு பட்டாயம்மா...
அம்மா நீங்கள் பிரிந்து முப்பத்தொரு நாட்கள்
கடந்த தென்று நம்பத்தான் முடியவில்லை...
காலங்கள் போனாலும் கண்மணியே எம் தாயே
உங்கள் நினைவுகள் என்றென்றும்...

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (17.12.2022) சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

"இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்."

மீசாலை வடக்கு, கொடிகாமம்.

குடும்பத்தினர். 077 371 5959


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வயோதிபர்களைத்...

தாக்கி ஐம்பதாயிரம் ரூபா பணம் மற்றும் 30 பவுணுக்கும் மேற்பட்ட நகைகள் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் பின்னிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் கூரை ஓடுகளை உடைத்து உள்ளே நுழைந்த மூன்று கொள்ளையர்கள் இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர். காயங்களுக்கு உள்ளான வயோதிபத் தம்பதியினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவ இடத்துக்கு தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-213)

## காணாமல்...

அல்லது மேற்படி நபர் காணாமற்போனமைக்கான காரணத்தை முன்வைக்க வேண்டுமென்றும் மேல் நீதிமன்றம் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களை முன்னிலைப்படுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகள் நேற்று மேல்நீதிமன்றத்தில் இடம்பெற்றன. இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் முடிந்த இறுதிக் கட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அதாவது இலங்கை இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஐந்து வழக்குகளின் விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் இன்று (நேற்று) தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த வழக்குகளின் பூர்வாங்க விசாரணைகள் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்று, அதன் பின்னர் நீதிவானின் அறிக்கையின் பிரகாரம் வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு வழக்குகள் வந்தன.

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நடைபெற்ற விளக்கத்தில் எல்லா மனுதாரர்களும் தமது சாட்சியத்தை வழங்கினார்கள். பின்னர் இராணுவம் சார்பாகவும் சாட்சியம் அளிக்கப்பட்டது. இராணுவ அதிகாரியொருவர் சாட்சியம் வழங்கும் போது சரணடைந்தவர்களின் பட்டியல் தங்களிடம் இருப்பதாகக் கூறியிருந்தார். எனினும் அந்தப் பட்டியல் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

பின்னர் இந்த வழக்கு மேல்நீதிமன்றில் பரிசீலிக்கப்பட்டு இன்று (நேற்று) முதலாவது வழக்கின் தீர்ப்பு வாசிக்கப்பட்டது. மனுதாரரின் கணவர் படையினரிடம் சரணடைந்தமையையும் அவரும் இன்னும் சிலரும் பேருந்துகளில் இராணுவத்தினரால் ஏற்றிச் செல்லப்பட்டனர் என்பதையும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. மனுதாரரின் கருத்தை மறுத்த இராணுவத்தினர் அது தொடர்பான திருப்திகரமான பதிலையும் முன்வைக்கவில்லை. எனவே மனுதாரரின் வேண்டுகோளின் பிரகாரம் ஆட்கொணர்வு மனுவினுடைய எழுத்தாணையை நீதிமன்றம் அனுமதித்தது. ஆதலால், அடுத்த தவணையில் காணாமல் ஆக்கப்பட்டவரை நீதிமன்றில் சமர்ப்பிக்கவேண்டும், அல்லது அவர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான காரணங்களை விளக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. அதேசமயத்தில் இன்னுமொரு வழக்கில் மனுதாரர் போதுமான ஆவணங்களை நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. அடுத்த மூன்று வழக்குகளும் ஜனவரி 27ஆம் திகதி நீதிமன்றத்தில் கூப்பிடப்பட்டு அதன் தீர்ப்பு வழங்கப்படும் - என்றார். (அ-ம-110)

## சிறுபான்மையினர்...

குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர் தமது கேள்வியில், 'பெரும்பாலும் பொருளாதார நெருக்கடிகள் அரசியல் நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும். இங்குள்ள சிறுபான்மை சமூகங்களில் இருந்து உங்களுக்கு எவ்வாறான ஆதரவு கிடைக்கிறது? எதிர்காலத்திலும் இதேபோன்ற ஆதரவை அனுபவிப்பீர்கள் என்று நினைக்கிறீர்களா?' என வினவியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன,

'இலங்கையும் இந்தியாவும் உலகின் மிகப் பழமையான ஜனநாயக நாடுகளாகவுள்ளன. இங்கு மக்கள் அரசுகளைத் தேர்ந்தெடுப்பதுடன், பதவி நீக்கவும் செய்துள்ளனர். இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையேயான உறவு அப்படியே உள்ளது. மேலும், ஒவ்வொரு அரசும் அனைத்து குடிமக்களுக்கும், அவர்களின் வாழ்க்கை, பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, கல்வி போன்றவற்றில் சாத்தியமான அனைத்து வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளது.

இலங்கை அரசமைப்பின்முன், அனைவரும் சமம். தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் எவரும் சவால் விடலாம். ஆகவே, கடந்த சில மாதங்களில் நிலவிய ஜனநாயக அமைதியின்மைக்குப் பதிலளிப்பதில் இப்போது அதிக நம்பிக்கை உள்ளது என்று நான் நினைக்கிறேன்.

அவர்கள் யாராக இருந்தாலும், எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் மக்கள் மத்தியில் எங்கள் நம்பிக்கையை முழுமையாக மீட்டெடுத்துள்ளோம். எங்கள் குடிமக்கள் அனைவரும் பிரார்த்தனை செய்த எங்கள் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமையை எங்களால் மீண்டும் கொண்டுவர முடிந்தது.

அரசின் மீது அளப்பெரிய நம்பிக்கை உள்ளதுடன், நாட்டின் வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சிகளுடனும், எதிர்க்கட்சிக்குள் இருக்கும் அரசியல் குழுக்களுடனும் நாங்கள் இணைந்து செயற்படுகின்றோம். எவருக்கும் பாரபட்சம் கிடையாது. வடக்கு மக்களோ அல்லது தமிழ் பேசும் மக்களோ அல்லது முஸ்லிம் மக்களோ என அனைவரும் முன்வைத்த வேறு சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, தீர்க்கப்படாத புதிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்' - என்றார். (அ-ம-22)

## டிசெம்பர்...

என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர் நா. பிரதீபராஜா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

உயரமுத்தம் (வறண்ட பனிக்காற்று) வடக்கு மாகாணம் வரை மீண்டும் இடையூறு செய்வதால் தாழமுக்கம் இலங்கை நோக்கி முன்னேறுவதில் தாமதம் ஏற்படுகிறது.

இதே நேரத்தில் வட இந்தியாவில் இருக்கும் மேற்கத்தேய காலநிலை இடையூறுகள் தனது ஆதிக்கத்தை டிசெம்பர் 18 ஆம் திகதி வரை இந்திய நிலப்பரப்பில் கொண்டிருக்கும். அதன் பின்னர் தனது பாதையில் மாற்றத்தை ஏற்படுத்தி சற்று விலகிச்செல்வதால், வங்காள விரிகுடாவில் முன்னேற முடியாமல் தடைப்பட்டு நிற்கும் தாழமுக்கம் இலங்கையின் நிலப்பரப்பை நோக்கி விரைவாக முன்னேறும். (இதன் காரணமாக குறித்த தாழ்வு நிலை, புயலாக மாறுவதற்கான வாய்ப்பு முற்றாக இல்லாமற் போகின்றது) இதனால், வடக்கு - கிழக்கில் நாளை ஆரம்பிக்கவேண்டிய தொடர் மழைவீழ்ச்சி நான்கு நாள்கள் பின்னோக்கிச் செல்கிறது. டிசெம்பர் 20 செவ்வாய் முதல் 26 வரை வடக்கு - கிழக்கில் பரவலாக வயல்கள், குளங்கள் நிரம்பும் அளவுக்கு தொடர் மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது - என்றார். (அ-ம)

## மனைவி,...

வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்ட நபர் அங்கிருந்து தப்பிச்செல்ல முயன்றபோது அயலவர்கள் இணைந்து மடக்கிப்பிடித்து அவரைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். வாள்வெட்டுக்கு இலக்கானவர்கள், நோயாளர் காவு வண்டி ஊடாக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-125)

## ஒரே...

யத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. அயல் வீட்டாருடன் இடம்பெற்ற முரண்பாடு கைகலப்பாகிய நிலையில் இந்த வாள்வெட்டு இடம்பெற்றுள்ளது. வாள்வெட்டில் படுகாயமடைந்த மூவரும் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-27)

## தமிழர்களை...

டுள்ளமை சர்வதேசத்தையும், தமிழ்ச்சமூகத்தையும் ஏமாற்றும் செயற்பாடாகும் - இவ்வாறு தெரிவித்துள்ளது ஜே.வி.பி. இவரது ஏமாற்றுச் செயற்பாட்டில் பங்காளிகளாகக் கூடாது என்பதற்காகவே சர்வகட்சிக் கூட்டத்தை புறக்கணித்தோம் என்றும் அந்தக் கட்சி நேற்று வெளிப்படையாக அறிவித்தது.

ஜனாதிபதி தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சர்வகட்சிக் கூட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) புறக்கணித்தமை தொடர்பில் வினவியபோது நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் 2015 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் கூட்டாட்சி அரசாங்கத்தைத் தோற்றுவித்தார்கள். இருப்பினும் இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய செயற்படவில்லை. நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற உண்மை நோக்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு காணப்படுமாயின் அவர் 2015ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அரசாங்கத்தில் அதனைச் செய்திருப்பார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் அல்லர். அவர் பொதுஜன பெரமுனவின் பிரதிநிதி. அவர்களின் நோக்கத்துக்கு அமையவே அவர் செயற்படுவார். 'இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கத் தயார்' என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தர்மசங்கடத்துக்கு உள்ளான நிலையில் சபையில் வைத்து இணக்கம் தெரிவித்தாரே தவிர அவர் ஒரு போதும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இடமளிக்க மாட்டார். தனது தரப்பினர் ஊடாக அதிகாரப் பகிர்வு விடயத்துக்கு அவர் தடையாக இருப்பார்.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் அதிகாரப் பகிர்வுக்குத் தான் தயார் என ஜனாதிபதி சர்வதேசத்தையும், தமிழ் சமூகத்தையும் ஏமாற்றும் வகையில் செயற்படுகிறார். இவரது ஏமாற்று செயற்பாடுகளுக்கு பங்குதாரராக நாங்கள் தயார் இல்லை. தீர்வு வழங்குவது சாத்தியமற்றதாயின் அது இன நல்லிணக்கத்துக்கு மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தும். அனைத்துப் பிரஜைகளும் சமமாக மதிக்கப்படும் சூழல் அரசமைப்பால் உறுதிப்படுத்தப்படவேண்டும். அதுவே உண்மையான இனப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும்.

நாட்டில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரை இரண்டாம் சமூகம் என அடையாளப்படுத்துவதை அரசமைப்பால் தவிர்க்கவேண்டும். புதிய அரசமைப்பில் அனைத்து இன மக்களும் இலங்கையர்கள், இன அடிப்படையில் எவருக்கும் விசேட வரப்பிரசாதங்கள் வழங்கப்படக்கூடாது. ஓர் இனத்துக்கு மாத்திரம் அரசமைப்பினால் விசேட சலுகை வழங்கப்படும்போது எவ்வாறு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்? - என்றார். (அ-ம)

## ஆளுநர்...

கத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் நேற்று மு.ப. 10.30 மணிக்கு ஆரம்பித்த ஆர்ப்பாட்டம், பின்னர் பேரணியாக யாழ்ப்பாணம் ஆளுநர் அலுவலகத்தை அடைந்தது. அதன் பின்னர் ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகவும் சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளுக்கு எதிராகப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

'கிராஞ்சியில் சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளை அகற்றுமாறுகோரி மீனவ சமூகத்தினர் சுமார் 70 நாள்களுக்கு மேலாக தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். கிராஞ்சியில் அமைக்கப்பட்டுள்ள முறையற்ற இந்தப் பண்ணைகளால் சிறு மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால்தான் இந்தப்போராட்டத்தை முன்னெடுத்தோம். ஆளுநர் கொழும்பிலுள்ள நிலையில், அவரின் இணைப்புச் செயலாளரிடம் எமது பிரச்சினைகள் தொடர்பில் கூறியுள்ளோம். இந்த விடயத்தை ஆளுநருக்குத் தெரிவித்து இரு வாரங்களில் தீர்வு தரப்படும் என்று எமக்குத் தெரிவித்துள்ளனர்' என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (அ-ம-27)


**YOGIS** Institute of Beauty therapy, Hair dressing & Home Science (PVT) Ltd.

**18.12.2022 ஆம் திகதி Sunday 6 வகை Cake கலவைகள் (Mixtures) செய்முறை விளக்கப் பயிற்சி வகுப்புக்கள், அதற்குரிய ஐசிங் செய்யும் முறைகளும் நடைபெறவுள்ளது.**

1. Easy method Rich Cake with almond icing and wraping
2. Love Cake
3. Marble Cake with butter cream icing
4. Red Velvet Cake with cream cheese icing
5. Chocolate Swiss Roll Cake with Chocolate cream icing
6. Egg Less Cake

Fee 3000/=

ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்

75, Amman road, Nallur, Jaffna.

Tel:0777 164 923, 077 277 2212


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இலத்திரனியல் ஸ்தாபனம் ஒன்றிற்கு விற்பனை பிரதி நிதிகள் தேவை. T.P :076 324 1761

(CS 22219) (3/6) Email - sjeevkan@gmail.com

**புத்தகசாலை ஒன்றுக்கான வேலை வாய்ப்புகள்**

1. விற்பனை பிரதிநிதி (ஆண் /பெண்)
2. உதவியாளர் (ஆண் / பெண்)

உங்கள் சுயவிபரக்கோவையை கீழ்காணும் Whatsapp இலக்கத்துக்கு அனுப்பிவைக்கவும்

077 494 9683, 076 154 8866

**காரியாலயத்துக்கான கட்டடம் வாடகைக்கு**

206/2 ஸ்ரான்லி றோட்டில் உள்ள (CDB வங்கிக்கு மேல்) 2200 சதுர அடியைக் கொண்ட இடம் உண்டு.

தொடர்பு: 077 360 9005

(CS 22233)(3/6)

**மணமகன் தேவை**

1981 இந்து கௌரவ குடும்பம் திருவோண நட்சத்திர உதயத்து செவ்வாய். அரச உத்தியோக மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

(CS 985)(3/6) 076 892 0368

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 44 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச் சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

**தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:-**

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- **ஜெயம்**

**077 8147 389**

**077 9865 457**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 185 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தரகர் தேவையில்லை.**

பார்வையிடும் நேரம் :

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- **ஜெயம்**

**077 98 65 457**

**077 81 47 389**


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை பரமானந்தம்

**(ஓய்வுபெற்ற பொதுமுகாமையாளர் - பருத்தித்துறை பல நோ. கூ. சங்கம்)**



பிறப்பு:16.09.1951 இறப்பு:15.12.2022

கெருடாவிலைப் பிறப்பிடமாகவும், அரசடி தொண்டைமானாற்றை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமானந்தம் கடந்த (15.12.2022) வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை நாகம்மா தம்பதியினரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தங்கம் தம்பதியினரின் மருமகனும், அருந்தவமலரின் ஆருயிர்க் கணவரும், தர்ஜிகா (முன்னாள் பதிப்பாசிரியர் - சட்ட வரைஞர் திணைக்களம்), சுரேகா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், புத்தூர் பிரதேச சபை), சுமதா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பருத்தித்துறை நகரசபை), வினோதா (இலங்கை மத்திய வங்கி), நிரோஷ்குமார் (கொமர்ஷியல் வங்கி - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஞ்சித் (தொழி னுட்ப உதவியாளர், புகையிரத திணைக்களம்), லோகதர்சன் (உரிமை யாளர் சின்னராசா ஸ்ரோர்) ஆகியோரின் மாமனாரும், தவமணிதேவி, அமரர் தில்லையம்பலம், ரஞ்சினிதேவி, சிவானந்தம், சறோஜினிதேவி, சச்சிதானந்தம் (உரிமையாளர் KVS Hardware - காட்டுப்புலம்), செல்வானந்தம் (கொழும்பு), சதானந்தம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், புஸ்பகாந்தன் (கனடா), விஜயமலர் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், கஸ்மிதா, நயனிகா, பர்விதா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மண்டபக்காடு,
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 755 1600**
**076 912 3152**

(CR38779)1-6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.